# தென்னாசிய சாஸ்திரீய நடன பாரம்பரியங்களில் இலங்கையில் நாட்டிய சாஸ்திர மரபு- ஒரு நோக்கு

**மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா**
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஆய்வுச் சுருக்கம்

ஆசியாவின் தென் பகுதியிலுள்ள தற்கால இந்தியக் குடியரசு, பாகிஸ்தான், வங்காள தேசம், நேபாளம், பூட்டான், இலங்கை, மாலைதீவுகள் ஆகியவையே தென்னாசிய நாடுகளாகும். புராதன காலந்தொட்டு மனித நாகரிகம் தொடர்ந்து வளர்ந்து வந்த பிராந்தியங்களில் தென்னாசிய நிலப்பரப்பு மிகவும் முக்கியமானதாகும். இப் பிரதேசங்களில் சிறந்த நாகரிக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் நாகரிகம் வளர்ச்சியடைய அரசியல், நிருவாகம், சட்டம், சமூகம், பொருளாதாரம், கலைகள் என்பன குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டன. கலைகளில் கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலிய குழைமைகக் கலைகளும் (Plastic Arts), இசை, நடனம் நாடகம் முதலிய அவைக்காற்றுக் கலைகளும் (Performing Arts) குறிப்பிடத்தக்கன. ஆரம்ப காலத்தில் கலைகளை உள்ளடக்கிய கூட்டுக்கலைகளாக நடனம் தென்னாசியாவில் வளர்ந்தது. தென்னாசியாவின் வெவ்வேறுபட்ட பகுதிகளிலும் பல்வேறுபட்ட கலைகள் இன்று வரையும் தொடர்ந்து நிலவுகின்றன. இவற்றில் காலப்போக்கிலே செம்மைப்படுத்தப்பட்ட சாஸ்தரீய நடனங்களாகி அவ்வப் பகுதிகளுக்குச் சிறப்பானவைகளாக இந்தியக் குடியரசிலே விளங்கியபோது தமிழ்நாட்டிற்குரிய பரதநாட்டியம் முக்கியத்துவ மான இடத்தினைப் பெறுகின்றது. நடனங்கள் அனைத்திற்குமான பொதுவான அம்சங்களும், சிறப்பான அம்சங்களும் சாஸ்திரிய நடன மரபில் உள்ளன. இச்சாஸ்திரீய நடனங்கள் அனைத்திற்கும் பொதுவாக நாட்டிய சாஸ்திரமே முதல் நூலாகக் கொள்ளப்படுகின்றது. இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடுகளிலும் நாட்டிய சாஸ்திர மரபு பரவியுள்ளது. குறிப்பாக இலங்கையிலும் அதன் தாக்கம் காணப்படுகின்றது. குறிப்பாக கி.பி.11ம் நூற்றாண்டு (சோழப் பெருமன்னர் ஆட்சி) தொடக்கம் இசை, நடனம் பற்றிய இலக்கியக்

குறிப்புகளும், சிற்பம், ஓவியம் முதலியவை பற்றி குறிப்புகளும் நன்கு காணப் படுகின்றன. இலங்கையில் இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய நடன சிற்பங்கள் பெரும்பாலும் பொலநறுவ காலத்தவையும் அதற்கு பிற்பட்ட காலத்தவையுமே சாரும். குறிப்பாக கிடைக்கப்பெற்ற இறை உருவங்கள் மரச் சிற்பங்கள், வரையப்பட்ட ஓவியங்கள், இலங்கையின் புராதன சிவாலயங் கள் என்பன சான்றாதாரங்களாகின்றன. இலங்கையில் கிடைக்கபெற்ற வடமொழி மகாகாவியம் ஒன்றில் இசை, நடனம், நாடகம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சில தூது இலக்கியங்களிலும் நடன, நாடக மரபுகள் பரந்து காணப் படுகின்றன. இந்தியா போன்றே இலங்கையிலும் நடனக் கலையிலே நாட்டிய சாஸ்திர மரபின் தாக்கத்தினைக் காணாமல் இருக்க முடியாது. மேலும் இலக்கியச் சான்றுகள், அமைக்கப்பட்ட கோவில்கள், சமுதாயப் பின்னணி, சமய, சமூகப் பணிகள் என்பன நடன மரபை முன்னெடுத்துச் செல்லுகின்றன. தென்னாசியாவுக்கே பொதுவான ஒரு நாட்டிய சாஸ்திர மரபு நிலவி வந்துள்ளது. இலங்கையின் நாட்டிய சாஸ்திர மரபில் இதன் தாக்கம் கவிதை, சாவியவியல் நாடகம், நடனம், இசை, சிற்பம்,ஓவியம் முதலிய கலைகளிலே பல்வேறு அளவில் பல்வேறு வடிவங்களாக ஏற்பட்டுள்ளன. இதற்கு சைவம், வைஷ்ணம் முதலிய வைதிக சமயங்கள் மட்டுமன்றிப் பௌத்தம், சமணம் முதலிய அவைதிக சமயங்களும் பங்களிப்புகள் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.